**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09012024-8112

Volume: 9

Issue: 1

Month: July

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.05.2024

Accepted: 23.07.2024

Published: 01.07.2024

Citation:
Balamurugan, N., and T. Rajkumar. "Social Thoughts in the Poems of Anton Benny." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 1, 2024, pp. 38–45.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i1.8112

*Corresponding Author:
nila.balu76@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Social Thoughts in the Poems of Anton Benny

**N. Balamurugan**
*Ph.D. Research Scholar, Department of Tamil*
*Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Coimbatore*
*https://orcid.org/0009-0005-4003-1340*

**T. Rajkumar**
*Associate Professor, Research Supervisor, Department of Tamil,*
*Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Coimbatore*

**Abstract**
*Everything around humans is called society. There are many modes of human life in society. Some have decided to live like this, some can live anyway, and some have decided to live anyway. The lifestyles of the village people are also closely related to the society. The poet expresses the social thoughts in the lifestyles of such village people. The purpose of this research paper is to know the social thinking of such village people through the poems of Anton Beni.*
***Keywords:*** *Society, Human Beings, Business, Education, Rich, Poor, Spirituality, Relationships, Anton Peni.*

**References**
1. *Thirukural*, Coimbatore, Vijaya Pathipagam.
2. *Bharathiyar Kavithaikal*, Chennai, Bharathi Pathipagam.
3. Anton Benny, *Oor endra Ondru Irunthathu*, Pondicherry
4. Anton Benny, *Oru Kavalam Nilachoru*, (Haiku) Chennai, Vaalu Pathipagam.
5. Anton Benny, *Sooriya Chethilkal*, (Haiku), Pollachi, Pollachi Ilakkiya Vattam,

# ஆண்டன் பெனி கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

***ந. பாலமுருகன்***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, கோவை

***முனைவர் த. ராஜ்குமார்***
இணைப் பேராசிரியர், நெறியாளர், தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, கோவை

***ஆய்வுச் சுருக்கம்***
*மனிதர்களைச் சுற்றியுள்ள அனைத்துமே சமுதாயம் என அழைக்கப்படும். சமுதாயத்தில் மனிதர்களின் வாழ்வியல் பல்வேறு முறைகளில் இருக்கிறது. சிலர் இப்படித்தான் வாழவேண்டும் எனவும், சிலர் எப்படியும் வாழலாம் எனவும், இன்னும் சிலரோ எப்படியோ வாழ்ந்தால் போதும் எனவும் முடிவெடுத்து வாழ்கின்றனர். கிராமத்து மனிதர்களின் வாழ்வியல் முறைகள் என்றும் சமூகத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகிறது. கிராமத்து மனிதர்களின் வாழ்வியல் முறைகளில் உள்ள சமுதாயச் சிந்தனைகளை கவிஞர் ஆண்டன் பெனி அவர்களின் கவிதைகளின் வாயிலாக அறிவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறவுச்சொற்கள்:*** *சமுதாயம், மனிதர்கள், தொழில்கள், கல்வி, பணக்காரர், ஏழைகள், பக்தி, உறவுகள், ஆண்டன் பெண்*

**முன்னுரை**

மனிதர்கள் தன் இனத்துடன் கூட்டமாக வாழும் இயல்புடையவர்கள். ஒருவருக்கொருவர் இணைந்தும், பகிர்ந்தும் வாழ்வதே மனிதர்களின் இயல்பாகும். மனிதர்கள் தான் மட்டும் சமுதாயத்தில் வாழ்வது இல்லை. மனிதர்களைச் சுற்றி விலங்குகளும், பறவைகளும், தாவரங்களும் என அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இணைந்து வாழ்வதே சமுதாயம் ஆகும். ஒரு சமுதாயத்தின் முன்னோர்களின் சிந்தனைகளை, வெற்றியை, சாதனைகள் பற்றிய தகவல்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வது மொழியும் இலக்கியமும் ஆகும். கவிஞர் ஆண்டன்பெனி இளம் வயதில் தான் கண்ட மனிதர்களைப் பற்றியும், அவர்களின் வாழ்வியல் நடைமுறைகளையும் தனது நூல்களில் எழுத்துகளாக உருவாக்கியுள்ளார்.

**நாடோடிகளின் பரிணாம வளர்ச்சி**

மக்கள் முதலில் நாடோடிகளாக, நாள்தோறும் உணவிற்காக அலைந்து திரிந்தனர். அப்படி நகர்ந்த மக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு நீரின் பயனை அறிந்துகொண்டு நதிக்கரையில் கூட்டமாக வாழத் தொடங்கினார்கள். அப்படி வாழத் தொடங்கிய பின்புதான் மனிதன் விவசாயத்தைக் கண்டறிந்து, கற்றுக் கொண்டு வாழ்ந்தான்.

**“விவசாயத்துக்கு ஒதுங்கின குடியிருப்புகளைக்**
**கிராமம் என்றழைக்கப்**
**பழகியிருந்த நாளிலேயே**
**உருவாகியிருந்தது எனது ஊர்”**
**(தட்டான் குழி,ப.70)**

என்ற வரிகள் மனித நாகரிகம், சமுதாய நிலை ஆகியன குறித்து வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது.

ஆண்டன் பெனியின் கவிதைகளின் வழியே கிராமத்தைவிட்டு நகரத்திற்கு

வாழச்சென்ற ஒவ்வொரு மனிதர்களின் உணர்வுகளும், வெளிப்படுகின்றன. கவிஞர் தனது நினைவுகளை மீட்டுக் கொண்டு வருகையில்தான் அவரின் ஆசைகளைப் புரிந்துகொள்ள முடிகிறது. அந்த ஆசைகள் அவருடையது மட்டுமல்ல வெளியில் கூறமுடியாத நம்முடைய ஆசைகளும்தான், அவை:

***"நினைவுகளில் கிராமமும்***
***மனதில் கிராமத்தானும் இருப்பதால்***
***சொந்த வீடில்லாத எனக்கும்***
***சொந்தக் கிராமம் ஒன்று***
***இன்னும் இருக்கிறது"***

***(தட்டான் குழி, ப.70)***

சமுதாயத்தில் தனக்கென சொந்தமாக நிலமோ வீடோ இல்லாதவர்களின் மனநிலையைப் படைப்பாளர்களின் படைப்புகள் வெளிக் கொணர்வது குறிப்பிடத்தக்கது.

கிராமத்து வாழ்க்கையை ரசித்து வாழ்ந்தவர்களைப் பற்றி சில நிகழ்வுகளைச் சொல்லலாம். ஒவ்வொரு நிகழ்விலும் கிராமத்தில் வாழ்ந்த மனிதர்கள் இயற்கையை அழிக்கும் எந்தவொரு செயலையும் முன்னெடுக்காதவர்கள். இயற்கையை முடிந்தவரை பாதுகாத்து இயற்கையோடு இணைந்து வாழப் பழகியவர்கள். இந்த இணைப்புதான் இன்றும் கிராமங்களை உயிர்ப்புடன் வைத்துள்ளது.

***"சோலைகளை, சேற்று வயல்களை***
***சேற்றுக்கால் மண் நிலத்தை***
***குயில் கூவும் தோப்புகளை***
***அழித்து***
***உருவாக்கிய கான்கிரீட் சாலையின்***
***கருங்கல் மீது***
***பழைய நினைவுகளோடு***
***எதையோ நுகர்ந்தவாறு***
***அமர ஒரு பூ இன்றி***
***ஒரு பட்டாம் பூச்சி"***

***(ஊர் என்று ஒன்று இருந்தது, ப.25)***

என்ற வரிகள் இயற்கையை அழித்து மக்கள் தங்கள் வாழ்க்கையை இழந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதுடன் சுற்றுச்சூழல் பாதிப்புகள் பற்றியும் விழிப்புணர்வையும் வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளன.

அவர்கள் கிராமத்தின் வயல்களில் நிமிர்ந்து நிற்கின்ற நெற்கதிர்களை பார்த்து ரசித்தவர்கள். கிராமத்தின் புழுதிக் காடுகளைக் கடந்துவரும் காற்றில் முகத்தைக்காட்டி செந்நிறத்தை பூசிக்கொள்பவர்கள். கிராமத்தில் வாய்க்கால்கள், ஆற்று நீரில் உடல் நனைத்து குளித்தவர்கள், கிராமத்தின் தோட்டங்கள், மரங்கள், பயிர்கள் எனத் தாவரங்களோடு வாழ்ந்தவர்கள். கிராமத்தின் பறவைச் சத்தங்களைக்கொண்டு எந்தப் பறவையென அடையாளம் கண்ட பறவையியல் வல்லுநர்கள். இப்படிப்பட்டவர்களுக்கு நகர வாழ்க்கை என்பது நரக வாழ்க்கை தான்,

***"மாயச் சிலந்திவலையின்***
***தூர நூலிழையில் ஊசலாடுகிறது***
***இந்த நகர வாழ்க்கை"***

***(தட்டான் குழி, ப. 56)***

என்ற கவிதை வரிகள், ஒற்றையடிப் பாதையில் கால்கள் பதிய நடந்தவர்களின் மனம் எப்போதும் ஒருவழிப் பாதையில் செல்ல விரும்புவதில்லை. அதிகாலை அழகை ரசித்து வாய்க்காலில் உடல் நனைக்கச் சென்றவர்களுக்கு நகரங்களில் வீட்டுக் குளியறை வசதிகள் ஈடாவதில்லை. இவை போன்ற மனிதர்களின் உணர்வுகளை ஆண்டன் பெனியின் கவிதைகள் வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

### காற்றில் கலக்கும் சாதியம்

சமுதாயத்தின் ஒவ்வொரு பக்கமும் நிறைந்து காணப்படுவதும், ஒவ்வொரு நொடியும் காற்றில் கலந்திருப்பதும் சாதியம் ஆகும். சாதி என்னும் கரையான்கள் சமுதாயத்தில் இருக்கின்ற சமத்துவத்தின் வேர்களை தினமும் அரித்துக்கொண்டு தான் இருக்கின்றன. சமுதாயத்தில் ஆங்காங்கே நடக்கின்ற சாதிச் சண்டைகள் மூலமாக நாம் இன்னும் மேம்பட்ட வாழ்க்கை முறைக்கு மாறவில்லை என்பதை நமக்கு நிரூபிக்கின்றன.

குறிப்பிட்ட சாதியினர் அருந்துகின்ற குடிநீர்த் தொட்டியில் இன்றும் சாணத்தையும், மலத்தையும் கலக்கின்ற நடைமுறைகள் இருப்பதன் மூலமாக இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ இதுபோன்ற பாவச்செயல்கள் நடைபெறாமல் இருக்க என எண்ண வைக்கின்றார் கவிஞர்.

**"ஏம்ல சிரிக்கீக குடிக்கிற தண்ணில**
**சாணத்தக் கரைச்சா ஊரு வெளங்குமாலே"**
**(தட்டான் குழி,ப. 29)**

அறிவியல் பொருளாதாரம் என எத்தனை வளர்ச்சி வந்தாலும் இன்னும் சாதிய அடக்குமுறைகள் சமூகத்தில் உலவிக் கொண்டிருப்பதை மறுப்பதற்கில்லை.

நகரப் பேருந்துகள் கிராமங்கள் எல்லாம் சென்று அங்கிருக்கும் மனிதர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, சுப நிகழ்வுகள், துக்க நிகழ்வுகள். பொழுதுபோக்கு, காதல் எனப் பல்வேறு காரணங்களுக்காகப் பயணப்படும் மனிதர்களை நாள்தோறும் சுமந்துகொண்டு செல்கின்றன. கிராமங்களில் இருந்து நகரங்களுக்கும், நகரங்களில் இருந்து கிராமங்களுக்கும் மனிதர்களை சுமந்து கொண்டு செல்கிறது.

மனிதர்களை மட்டுமல்ல மனிதர்களோடு சேர்த்து அவர்களின் பலவிதமான உணர்வுகளையும் சுமந்துகொண்டு செல்வதில் எப்போதும் நகரப் பேருந்துகளுக்கு ஈடு இணை எதுவுமில்லை. நகரப் பேருந்துகள் என்றென்றும் கிராம மக்களின் வாழ்க்கையில் முதலிடத்தில் இருக்கின்றன.

பேருந்துகளில் அமைக்கப்பட்டுள்ள இருக்கைகள் எப்போதும் பயணிகள் அமர்வதற்காகவே இருந்தாலும் அந்த இருக்கைகளில் எல்லோரும் எப்போதும் அமர்ந்து விடமுடியாது. பேருந்தின் ஒவ்வொரு இருக்கையிலும் சாதி எனும் முட்கள் குத்தப்பட்டிருக்கும். அரசு அல்லது தனியார் துறையின் மூலமாக பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்காக விடப்பட்ட பேருந்துகளின் சக்கரங்களில் சாதியம் நசுங்காமல் பேருந்தின் இருக்கைகளில் அமர்ந்து பயணப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

**"வடக்குத் தெருப் பயல்களும்**
**சரிக்குச் சமமா ஒக்காந்து வாற பஸ்ஸூ**
**நமக்கு எதுக்குலேனு தான்**
**கண்ணன் டவுன் பஸ்ஸையே**
**நிப்பாட்டுனாங்களாம்"**
**(தட்டான் குழி, ப. 41)**

விளிம்பு நிலை மக்களின் பக்திகூட இங்கு மதிக்கப்படுவதில்லை. கோவில்களின் உள்ளே வீற்றிருக்கும் எந்தக் கடவுளும் இந்த மக்களின் கரம்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றதில்லை. எல்லோருக்கும் அருள்பாலிப்பதாக எல்லோராலும் சொல்லப்படும் கடவுள்கள் இந்த மக்களுக்கு மட்டும் கண்களை மூடிக் கொள்கிறார்கள்.

சாமிகளில்கூட இன்று நாகரிகம் புகுந்துவிட்டது. பெரியதாக கோபுரங்கள் கட்டிய கோவில்களில்தான் கடவுள்கள் குடிபுகுவார்கள் எனும் எண்ணத்தை ஏற்படுத்திவிடுகின்றன கோவில்களும், திருவிழாக்களும்.

**"நாலுகாசுருந்தா அம்மனுக்குக் கோயிலு**
**மீந்த சுண்ணாம்புல**
**அய்யனாருக்கு ஒரு பூச்சு**
**கருப்பன்தான் கடைசி வரைக்கும்**
**கலருமாறல" (தட்டான் குழி, ப. 41)**

**"துணி வெளுக்க மண்ணுண்டு**
**தோல் வெளுக்கச் சாம்பலுண்டு**
**மணி வெளுக்கச் சாணையுண்டு**
**மனம் வெளுக்க வழியில்லையே"**
**(பாரதியார் கவிதைகள்,**
**தோத்திரப்பாடல்கள், முத்துமாரி, 2)**

என்ற மகாகவி பாரதியின் வரிகள்தான் இங்கு நினைவுக்கு வந்து போகிறது. மனிதர்களின் மனங்கள் எப்போது மாறும்? சக மனிதர்களை தனது உறவாக எப்போது நினைப்பார்கள்? எல்லோரும் சமம் என்னும் நிலை எப்போது வரும்? என்ற ஏக்கத்தை மேற்கண்ட கவிதை வரிகள் வெளிப்படுத்துகின்றதைக் காணமுடிகிறது.

கல்வியால் இன்று பல குடும்பங்கள் குலத் தொழில்களின் பிடியிலிருந்து விலகி நன்கு வளர்ச்சி அடையத் தொடங்கியுள்ளன.

யாருக்கும் தெரியாத கிராமத்தில் யாருக்கும் தெரியாத யாரோ ஒருவரின் மகன் அல்லது மகள் இன்று எல்லாருக்கும் தெரியும் அளவிற்கு வளர்ந்து வந்திருப்பதற்கு ஒற்றைக் காரணம் கல்வி மட்டுமே. பள்ளி செல்லும் மகன் பள்ளியில் வாந்தி எடுத்துவிட்டான் என மதியமே வீடு வருகின்றான். வீட்டிற்கு வந்த மகனிடம் விசாரிக்கும் தாயும், பதில் கூறும் மகனும் பேசுவதை கவிதையாக்கி அக்கவிதையை இந்தச் சமூகம் பேசுமாறு கொடுத்துள்ளார் கவிஞர்.

**“ஸ்கூல் பாத்ரூம்ல ஒன்னுக்கு போனேம்மா**
**நாத்தம் கொடல பொறட்டிடுச்சி**
**நானென்ன செய்ய? என்ற மகனிடம் கேட்டாள்”**

**(இந்தப் பூமிக்கு வானம் வேறு,52)**

பள்ளிகளில் குழந்தைகளுக்கு கல்வியைக் கற்பித்தல் எவ்வளவு முக்கியமோ, அதே அளவிற்கு குழந்தைகளுக்கு நல்ல கழிப்பறை வசதிகளும், குடிநீர் வசதிகளும் செய்து தருவதாகும். இந்த நிலை பல இடங்களில் இருப்பதில்லை என்பது உண்மையாகும். இக்கவிதையில் உங்கப்பா இறந்த பின்னாடி அங்க ஆளில்லையா என்று கேட்கும் இடத்தில் நாம் இரண்டு செய்திகளை உணர்ந்து கொள்ளலாம் இக்கவிதையின் வழியாக.

முதல் செய்தியாக, இந்தத் தூய்மைப் பணியாளர்களின் வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை என்னும் இடத்தில் குறிப்பிட்ட சமுதாய மக்கள் அந்தப் பணியிலிருந்து மாறியுள்ளனர் என்று மகிழ்ச்சி அடையலாம். அவர்களை மாற்றியது கல்வியே.

இரண்டாவது செய்தியாக, இது போன்ற தூய்மைப் பணியாளர்களின் பணிக்கு அவர்களைத் தவிர மாற்று சமூகத் தினர் யாரும் வருவதில்லை அவர்களே தான் செய்ய வேண்டும் என இன்றும் அந்தச் சமூகம் விரும்புவதையும் உணர்ந்து கொள்ளலாம். கல்வி கற்ற சமூகம் இன்னும் தனது பழைமையைவிட்டுக் கொடுக்காமல் உள்ளது என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

**“கழுவத்தான் வேண்டாம்,**
**பெஞ்ச மூத்துரத்துல**
**ஒரு போணித் தண்ணி ஊத்தறதுக்கு,**
**உங்கப்பன் செத்த பின்னாடி**
**ஆளில்லையா அங்க?”**

**(இந்தப் பூமிக்கு வானம் வேறு, 52)**

கிராமத்தின் வயல் வரப்புகளிலும், வாய்க்கால்களிலும் இன்றும் சாதியக்காற்று சுழன்றடித்தபடிதான் இருக்கிறது. இந்த நிலை என்றைக்கு மாறும் என்பதை எல்லோருமே எதிர்பார்க்கிறோம். “சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்” என்ற மகாகவி பாரதியின் ஆசையும், ஆண்டன் பெனியின் ஆசையும் நிறைவேற வேண்டும்.

### காய்ந்து போன விவசாயம்

காலநிலை மாற்றம் என்பது தற்போது பெரிய பேசுபொருளாக இருக்கிறது. வெயிலும் மழையும் மாறிமாறி இருக்கின்ற நாட்டில் இரண்டில் ஏதோவொன்று குறைந்தாலும் அல்லது இரண்டில் ஏதோவொன்று அதிகமானாலும் பெரிய பாதிப்பை மனிதர்கள் அடைவார்கள். எப்போதும் மழையே சரியான பருவத்தில் பெய்யாமல் மனிதர்களைத் தவிக்கவைத்துப் பெரும் பாதிப்புகளை உண்டாக்கும். அந்தப் பாதிப்புகள் சரியாவதற்கு நீண்ட நாட்களாகும்.

**“வெயில் ஈரத்தைத் தின்றபின்**
**சக்கையாக வெடித்துக் கிடக்கிறது நிலம்**
**காலத்தின் போதும்**
**காற்றுக்கும் ஒதுங்கவில்லை மழை”**

**(தட்டான் குழி – ப. 52)**

தொடர் வெயிலின் காரணமாகத் தவித்துப் போய்விடுகிறார்கள் மனிதர்கள். எதைக் கொண்டும் மழையை வரவழைக்க முடியாத காரணத்தால் மக்கள் ஏக்கத்துடன் இருக்கின்றனர். விவசாயத்தையே முதன்மையாக

நம்பி வாழும் மக்களின் நம்பிக்கையின் மீது ஒருதுளி மழைநீர் பட்டுவிடாதா என்றும் காத்துக்கொண்டுள்ளனர்.

**"மண்புழுக்களின் தற்கொலை தெரிந்தும்**
**ஒருசொட்டுக் கண்ணீர் விடவில்லை**
**இவ்வானம்" (தட்டான் குழி - 52)**

விவசாயிகளின் கண்ணீர் வற்றிவிடும் சூழல் உருவாகிறது. தங்களது வாழ்வாதாரம் பாதிப்பதோடு இவ்வுலகில் எல்லாமே பாதிப்படையும் என்ற சூழல் உருவாகிறது. உயிர்க்கோளத்தில் மனிதர்களும் ஒரு சார்புண்ணியாக வாழ்கின்றனர். மனிதர்களை நம்பியும் பல உயிரினங்கள் வாழ்கின்றன.

மழைவேண்டி நாம் என்ன செய்கின்றோம் என்பதை ஹைக்கூ கவிதையொன்றில் கவிஞர் அழகுபட தெரிவித்ததை இங்கே நினைவு கூர்வோம்.

**'மரங்களை எரித்து**
**நடக்கிறது**
**மழைக்கான யாகம்'**
**(ஒரு கவளம் நிலாச்சோறு,ப.22)**

மரங்களை வைக்க எந்த மனிதர்களுக்கும் நேரமுமில்லை, அதுகுறித்த புரிதலும் இல்லை.

**"முந்தைய போகத்தின்**
**விளையாத விதைகளை எடுத்து**
**பல்லாங்குழியாடுகிறது**
**இன்னும் உயிரோடிருக்கும் எலியொன்று"**
**(தட்டான் குழி, ப.52)**

தற்காலத்தில் விவசாயம் செய்ய யாரும் முன்வருவதில்லை என்பதை மேற்கண்ட கவிதை வரிகள் வெகு இயல்பாய் வெளிப்படுத்துகின்றன.

## மலரவேண்டும் மனிதநேயம்

**'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்றும் உரியர் பிறர்க்கு' (குறள் ,72)**

இந்த உலகம் அன்பென்னும் அச்சாணியால் தான் சுழன்று கொண்டுள்ளது என்பதை வள்ளுவர் உலகிற்கு உணர்த்தியுள்ளார். சக மனிதர்களை மனிதர்களாகப் பார்த்தாலே போதுமானது. சக மனிதர்கள் பாதிக்கும் போது நாம் உடனிருப்பதை விடவும் உயர்ந்தது சக மனிதர்களை மனிதர்களாகப் பார்ப்பதாகும்.

**'அறுந்த என் செருப்பை**
**அப்படியே காலிலிருந்து உதறாமல்**
**கைகளில் எடுத்துக் கொடுத்தேன்'**
**(இந்தப் பூமிக்கு வானம் வேறு, ப. 53)**

எந்தத் தொழில் செய்தாலும் அதை அனைவரும் சிறப்பாகச் செய்யவேண்டும். அதனால்தான் செய்யும் தொழிலே தெய்வம் என்ற பழமொழி உள்ளது, செருப்புத் தைக்கும் தொழிலாளியின் பசியைப் போக்கி அவருடைய குடும்பத்தைக் காப்பது தேய்ந்து வருகின்ற செருப்புகள்தான். அவர் இருக்கின்ற இடம் நெருங்கியவுடன் அவரின் முன்பாகச் செருப்பைக் காலில் இருந்து உதறி விட்டு அவரைப் பார்க்கின்றோம். நாம் உதறிய செருப்புகளை கைகளில் எடுத்து தனது பணியைச் செய்யத் தொடங்குகிறார் அத்தொழிலாளி. அவர் கைகளில் எடுக்க எந்தச் சங்கடமும் படவில்லை என்பதை நாம் உணர்கிறோம்.

**"கைகளில் எடுத்துக் கொடுத்தேன்**
**என்னை ஒரு நிமிடம் உற்றுப்பார்த்த தொழிலாளி**
**இரு கை நீட்டி எடுத்துக் கொண்டார்"**
**(இந்தப் பூமிக்கு வானம் வேறு, ப. 56)**

இதுபோன்ற விளிம்பு நிலை மக்களை மதிக்கவேண்டும். இதை சூரியச்செதில்கள் என்ற தமிழில் வெளிவந்த ஐந்தாவது ஹைக்கூ கவிதைத் தொகுப்பில் கவிஞர் நன்கு கையாண்டுள்ளார்.

**"கண்காட்சியில் மரங்களில் மனிதர்கள்**
**காணும் மனிதரில்**
**மரங்கள்" (சூரியச் செதில்கள், ப.39)**

## பணமே பிரதானம்

ஏழ்மை என்பது சமுதாயம் எங்கும் பரவியிருக்கும் ஒன்றாகும். இன்று நேற்றல்ல சமுதாயத்தில் பணம் படைத்தவனும்,

பணம் இல்லாதவனும் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். பணம் படைத்தவர்களுக்கு இங்கு, எல்லாம் எளிதாகக் கிடைக்கிறது. பணம் இல்லாதவர்களுக்கு இங்கு எதுவுமே அவ்வளவு எளிதாகக் கிடைத்துவிடுவதில்லை மரணத்தை தவிர.

**'விற்பனையாகாது வீடு திரும்பும் பலூன்களுக்கு**
**உள்ளுக்குள் முட்டும் காற்றினை இறக்கிவிட்டு**
**சற்றே ஓய்ந்து கொள்ளத் தெரிவதில்லை'**
**(இந்தப் பூமிக்கு வானம் வேறு, ப. 15)**

தினமும் உழைத்து வேலை செய்பவர்களின் வாழ்க்கைச் சூழலில் ஒரு நாள் என்பது எளிதில் கடந்து விடுவது இல்லை. நடைபாதை வியாபாரிகள், தள்ளுவண்டி வியாபாரிகள், மூட்டை தூக்குபவர்கள் என இன்னும் பலப்பல தொழில்களைச் செய்யும் தினக் கூலிகளின் வாழ்வியல் என்பது மிகவும் கடினமான ஒன்றாகவே இருக்கும். விற்பனையாகாத பலூன் கடைக்காரன் மீதி பலூன்களோடு வீடுவர,

**"பலூன் ஒன்றினைத் தொட்டுவிடத் தவிக்கும்**
**பலூன்காரன் குழந்தை"**
**(இந்தப் பூமிக்கு வானம் வேறு, ப. 15)**

குழந்தைகளுக்குப் பிடித்த பலூன்கள், குழந்தைகளே வாங்குபவர்களாகக் கொண்ட வியாபாரமாக இருந்தாலும் தன்னுடைய குழந்தைகளுக்கு அந்தப் பலூன்கள் வெறும் காட்சிப் பொருளாகவே இருக்கும். வண்ணங்களைப் பார்த்து குழந்தைகள் சிரித்துக்கொள்ள வேண்டும். காற்றில் மெல்லமாய் அசைவதைப் பார்த்து கைதட்டிக் கொள்ளவேண்டும். ஆனால் அவை அக் குழந்தைகளின் கைசேராது என்பதை அந்த வியாபாரியின் வழியே கவிஞர் நமக்கு இக்கவிதையின் வழி உரைக்கிறார்.

புலம் பெயர்தல் என்பது பெரும்பாலும் பொருளாதாரத் தேவைகளுக்காகவே இருக்கும். ஒரு மரமானது தனது அத்தனை கிளைகளையும் இழந்து வேரோடு பிடுங்கப்பட்டு மாற்று இடத்தில் மறுநடவு செய்வதுபோல் ஆகும். இதில் பாதிப்புகள் அதிகமாக இருக்கும். வாழ்க்கையை வாழ்ந்து மீண்டு வருதல் என்பது பெரும் துயரத்துடனே கழியும்.

**"இடம் பெயர்தலின் வலிகளைக்**
**காகிதப் பணம்**
**தனது அத்தனை கைகளோடும்**
**மறைக்க முயற்சித்துக் கொண்டிருந்தது"**
**(இந்தப் பூமிக்கு வானம் வேறு - ப. 43)**

எத்தனை பொருள் ஈட்டினாலும் வலிகளுக்கு அவை மருந்தாகாது என்பது மறுக்கமுடியாத உண்மை என்பதை மேற்கண்ட கவிதைப் படைப்பு உணர்த்துகின்றது.

**முடிவுரை**

நாகரிகம் தோன்றிய நதிக்கரைகளில் சமுதாயமாக வாழத்தொடங்கிய மனிதர்களிடம் இன்றும் காணப்படுவதாகப் குணநலன்களைப் பட்டியலிடுகிறார் ஆண்டன் பெனி. கிராமங்களில் பிறந்து பொருள் ஈட்டுவதற்காக நகரத்திற்குச் சென்ற பலரின் மனங்களில் இன்றும் கிராமத்தின் வாசம் வீசிக்கொண்டு தான் உள்ளது. சாதியமும், குலத் தொழில்களும் இன்றும் கிராமத்தின் எல்லைகளைவிட்டு வெளியேற மறுக்கின்றன. கிராமத்தில் வசித்து உலகிற்கு உணவளிப்பவர்களின் வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் இதுவரை உண்டாகவில்லை. மனிதநேயமிக்க மனிதர்களை உருவாக்கும் உற்பத்திக் கூடமாக இன்றும் கிராமங்கள் இருந்து வருகின்றன. கிராமங்களில் சமூக ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குவதில் பணம்தான் பெரும் பங்காற்றுகிறது போன்ற சமூகச் சிந்தனைகளைக் கவிதை வரிகள் முன் வைக்கின்றன.

**துணை நின்ற நூல்கள்**

1. திருக்குறள், கோயம்புத்தூர், விஜயா பதிப்பகம்,
2. பாரதியார் கவிதைகள், சென்னை, பாரதி பதிப்பகம்.
3. ஆண்டன் பெணி, ஊர் என்று ஒன்று இருந்தது, புதுச்சேரி
4. ஆண்டன் பெணி, ஒரு கவளம் நிலாச் சோறு. ஹைக்கூ கவிதைகளின் தொகுப்பு, சென்னை, வாலு பதிப்பகம்
5. ஆண்டன் பெணி, சூரியச் செதில்கள், பொள்ளாச்சி, பொள்ளாச்சி இலக்கிய வட்டம்.